இந்திய தூதரகம்
கோலாலம்பூர், மலேசியா

# செய்தி அறிக்கை

## <u>இந்திய நாடாளுமன்ற பிரதிநிதி குழுவினர்கள் மலேசியா வருகை</u>

## <u>ஏப்ரல் 18 -20, 2016</u>

இந்திய நாடாளுமன்ற பிரதிநிதி குழுவினர்கள், ஏப்ரல் 18 முதல் 20, 2016 வரை மலேசியாவிற்கு வருகை புரிந்துள்ளனர்.

இந்தியாவின் சமாஜ்வாதி கட்சி (SP), பாரதிய ஜனதா கட்சி (BJP), காங்கிரஸ் கட்சி (INC), தெலுங்கானா இராட்டிர சமிதி கட்சி (TRS), சிவ சேனா கட்சி மற்றும் பிஜூ ஜனதா தளம் (BJD) என ஆறு முக்கிய அரசியல் கட்சிகளிலிருந்தும், கீழவை (லோக் சபா) மற்றும் மேலவை (ராஜ்ய சபா) என இரு அவைகளிலிருந்தும் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருகை புரிந்துள்ளனர். சமாஜ்வாதி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ ரவி பிரகாஷ் வர்மா அவர்கள் இதற்கு தலைமையேற்றுள்ளார். பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு மற்றும் சிறுபான்மை விவகாரங்கள் அமைச்சகத்தின் பொது செயலாளர் ஸ்ரீ அப்சல் அமானுல்லா அவர்களும் உடன் வருகை புரிந்துள்ளார்.

ஏப்ரல் 19, 2016 அன்று காலையில், இந்திய நாடாளுமன்ற பிரதிநிதி குழுவினர்கள், மலேசிய நாடாளுமன்ற சபாநாயகர் மாண்புமிகு டான்ஸ்ரீ பண்டிகார் அமின் மூலியா அவர்களைச் சந்தித்தனர். இச்சந்திப்பில், இவ்வாண்டு ஜனவரியில் சபா மாநிலத்தில் நடைபெற்ற காமன்வெல்த் பாராளுமன்ற சங்க கூட்டம் வெற்றிகரமாக நடைபெற்றதற்கு, இந்திய நாடாளுமன்றத்தின் லோக் சபா சபாநாயகர் தன்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டதாக இந்திய பிரதிநிதி குழுவினர்கள் தெரிவித்து கொண்டனர்.

மேலும், இந்திய பிரதிநிதி குழுவினர்களின் தலைவர், இந்தியா மற்றும் மலேசியா இடையே உள்ள வரலாற்று மற்றும் அதன் நெருக்கமான உறவுகளைப்

பற்றியும் அத்துடன் இரு நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்களின் நெருக்கமான தொடர்புகளைப் பற்றியும் குறிப்பிட்டு பேசினார். மேலும், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களின் வெற்றிகரமான மலேசிய பயணத்தைப் பற்றியும் அவர் இந்த சந்திப்பு கூட்டத்தில் குறிப்பிட்டார். அதே வேளையில், அவர்கள் மலேசிய நாடாளுமன்ற சபாநாயகர் இந்தியாவிற்கு வருகை புரிய அழைப்பு விடுத்துள்ளனர்.

மலேசிய நாடாளுமன்ற சபாநாயகர் மாண்புமிகு டான்ஸ்ரீ பண்டிகார் அமின் மூலியா அவர்கள் இந்தியா – மலேசியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே உள்ள நெருக்கமான உறவுகளைக் குறித்தும் இந்திய நாடாளுமன்றத்தின் ஜனநாயக நடைமுறைகளைக் குறித்தும் அவர் தமது பாராட்டினைத் தெரிவித்துக் கொண்டதோடு விரைவில் தாம் இந்தியாவிற்கு வருகை புரிவதாகவும் கூறினார். ஈப்போ பாராட் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு எம்.குலசேகரன் அவர்களும் மலேசிய நாடாளுமன்றத்தின் மக்களவைச் செயலாளர் டத்தோ ரோஸ்மி ஹம்சா அவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

18 ஏப்ரல் 2016 அன்று, மலேசிய இந்திய தூதரகத்தின் தூதகர் மாண்புமிகு திஎஸ் திருமூர்த்தி அவர்கள், இந்திய நாடாளுமன்ற பிரதிநிதி குழுவினர்களுக்கு விருந்து உபசரிப்பு ஏற்பாடு செய்திருந்தார். இவ்விருந்து உபசரிப்பிற்கு மலேசிய இந்திய அரசியல் கட்சி தலைவர்கள், பிரபல தொழிலதிபர்கள், மலேசிய இந்திய சமூகத்தின் முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டனர். புறப்படுவதற்கு முன்னதாக இந்திய நாடாளுமன்ற பிரதிநிதி குழுவினர்கள், மலேசியாவிலுள்ள முக்கிய பிரமுகர்களைச் சந்திக்க உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.



ஏப்ரல் 18, 2016 கோலாலம்பூர் ரெனசன்ஸ் தங்கும் விடுதியில் நடைபெற்ற விருந்து உபசரிப்பில் கலந்து கொண்ட மலேசிய அரசியல் கட்சி தலைவர்களுடன் இந்திய நாடாளுமன்ற பிரதிநிதி குழுவினர்கள்



இந்திய நாடாளுமன்ற பிரதிநிதி குழுவினர்களின் தலைவர் ஸ்ரீ ரவி பிரகாஷ் வர்மா மற்றும் மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மலேசிய நாடாளுமன்ற சபாநாயகர் மாண்புமிகு டான்ஸ்ரீ பண்டிகார் அமின் மூலியா அவர்களுக்கு நினைவு சின்னம் வழங்கினார்



இந்திய நாடாளுமன்ற பிரதிநிதி குழுவினர்களின் தலைவர் ஸ்ரீ ரவி பிரகாஷ் வர்மா மற்றும் மலேசிய நாடாளுமன்ற சபாநாயகர் மாண்புமிகு டான்ஸ்ரீ பண்டிகார் அமின் மூலியா அவர்களின் சந்திப்பு